பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 25 வியாழக்கிழமை 10.12.2020 கதிர் 265

## யாழ்., நல்லூரில் மீளவும் சபைக்கு வரும் 'பட்ஜட்'

(ந.லோகதயாளன்)

நல்லூர்பிரதேசசபை மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆகியவற்றின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் முறையே எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் மீண்டும் சபைக்கு வருகின்றது.

நல்லூர் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் கடந்த நவம்பர் 24ஆம் 6

# எங்கே எங்கள் சொந்தங்கள்? ராஜபக்ஷ அரசே பதில் சொல்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமிழர் தாயகத்தில் கண்ணீருடன் போராட்டம்








(நமது வடக்கு, கிழக்கு நிருபர்கள்)

கொழும்பு, டிசெம்பர் 10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அரச படைகளின் பலத்த கெடுபிடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. 2

## பஸ்ஸில் வந்திறங்கிய 33 யாசகர்கள் மன்னாரில் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.10

மன்னார்மாவட்டத்திற்குயாசகம் எடுக்கும் நோக்கில் வெளி மாவட்டங்களில் இருந்து பஸ்ஸில் வந்திறங்கிய 33 யாசகர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்

மகியங்கனை, புத்தளம், பொலனறுவை உள்ளிட்ட பகுதிகளில் இருந்துவாராந்தம்வியாழக்கிழமைகளில் மன்னார் நகர கடைகளில் யாசகம் பெறும் நோக்கில் அதிகளவானோர் மன்னார் 2

## கடல் வழியாக இந்தியாவுக்கு தப்பி ஓட முயன்றவர் பருத்தித்துறையில் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.11

திருகோணமலையில் இரட்டைக் கொலை புரிந்தார் என வழக்கு விசாரணையை எதிர்நோக்கும்ஒருவர்கடல்வழியாகஇந்தியாவிற்குத் தப்பிச் செல்ல முற்பட்ட சமயம் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையை சேர்ந்த நவரத்தின ராசா குகனேஸ்வரன் என்பவரே பருத்தித்துறைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் இரட்டைக் கொலை புரிந்தமைக்கான வழக்கு இடம்பெறும் நிலையில் தண்டனையில் இருந்து 2

## வெள்ளக்குழியில் விழுந்தவர் சாவு!

### துன்னாலையில் துயரம்



(எஸ்.நிதர்ஷன்)

மழை நிரம்பிய வெள்ளக்குழியில் தவறுதலாக விழுந்த நபர் ஒருவர் 2

## அக்கரைப்பற்றில் கான்ஸ்டபிள் கத்தியால் குத்திப் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பாலமுனையைச் சேர்ந்த 35 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனைப் பகுதியில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் 21 வயது இளைஞர் ஒருவரை 2



## கடமைக்கு இடையூறு; இருவருக்கு மறியல்!

(எஸ்.நிதர்ஷன்)

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்ட இருவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்ட இருவரை வழிமறித்த நெல்லியடிப் பகுதிக்குப்பொறுப்பான பொதுச்சுகாதாரப் பரிசோதகர், அனுமதிப் 2

## வவுனியாவில் 1,392 ஆவது நாளாகத் தொடர்கிறது காணாமல்போன உறவுகளைத் தேடும் போராட்டம்




(வவுனியா நிருபர்)

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக சுழற்சி முறையில் 1,392 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று பிற்பகல் நடைபெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று, தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு - கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தினரால் வவுனியா நகர சபை 2

மணமகள் தேவை

1983, யாழிந்து வேளாளர், திருவாதிரை

CIVIL ENGINEER, SINGAPORE

சொந்த இடம் : சுருவில்
பதிவு இல 4492

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு
31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)
ஒன்லைன் திருமண சேவை
www.EQMarriageService.com
Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

## கடமைக்கு இடையூறு; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரத்தைக் காண்பிக்குமாறு கேட்டுள்ளார்.

அதன்போது அவர்கள் இருவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் முரண்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு தொடர்பில் குடிதண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்ட இருவரையும் நேற்று விசாரணைக்கு அழைத்த பொலிஸார், அவர்களைக் கைது செய்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் இருவரும் இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் தகாத வார்த்தைகளால் பேசினார் எனவும், மற்றைய சந்தேகநபர் தன்னைத் தாக்க வந்தார் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மன்றுரைத்தார்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் அன்று வரை வழக்கை ஒத்திவைத்தார்.

## வவுனியாவில் 1,392 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்றலில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகர சபை முன்றலில் ஐரோப்பிய, அமெரிக்கக் கொடிகளை ஏந்தியவாறும் ஆரம்பமான இந்தக் கவனயீர்ப்புப் பேரணியானது பூங்கா வீதியூடாக ஏ -9 வீதியை வந்தடைந்து 1,392ஆவது நாளாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் கொட்டகையில் முடிவடைந்தது. அவ்விடத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்திலும் உறவினர்கள் ஈடுபட்டனர். (100)

## அக்கரைப்பற்றில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அக்கரைப்பற்றுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாலமுனையில் அமைந்துள்ள தனது உறவினரின் காணி எல்லைப் பிரச்சினை தொடர்பில், சமாதானம் செய்யச் சென்ற போதே பொலிஸ் கான்ஸ்டபிள் கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வாக்குவாதம் முற்றிய நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெள்ளக்குழியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழ்., வடமராட்சி, துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் மழை வெள்ளத்தில் வீதியோரமாகச் சென்ற வேளை அருகிலிருந்த குழியினுள் தவறுதலாக விழுந்துள்ளார்.

வீட்டிலிருந்து சென்றவரைக் காணாத உறவினர்கள், அவரைத் தேடியபோது வெள்ளத்தில் சடலமாகக் கிடப்பதைக் கண்டனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## பஸ்ஸில் வந்திறங்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகரிற்கு வருகை தந்து சகல வர்த்தக நிலையங்களிற்கும் ஏறி இறங்குவதனால் கொரோனா பரவலாம் என்ற அச்சம் மாவட்டச் செயலகத்தில் கொரோனாத் தடுப்புத் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் தணியும்வரையில் இந்த நடவடிக்கையை தடுத்துநிறுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு ஏற்பவே இன்றைய தினம் மன்னார் நகரிற்கு பஸ்ஸில் வந்து இறங்கிய யாசகர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நடவடிக்கையில் பொலிஸார், பொதுச் சுகாதார உத்தியோகத்தர், பிரதேச செயலாளர், கிராம சேவகர் எனப் பலரும் இணைந்து ஈடுபட்டனர்.

## கடல் வழியாக இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தப்பிக்கும் நோக்கில் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பகுதியில் ஓர் படகு ஓட்டியின் உதவியுடன் அவர் இந்தியாவிற்குத் தப்பிச் செல்லத்திட்டமிட்டார்எனக்கூறப்படுகின்றது.

அதற்காகப் படகில் ஏறிப் பயணித்த நேரம்கடலில்சுற்றுரோந்துநடவடிக்கையில் இருந்த கடற்படையினர் இதனை அவதானித்துள்ளனர். கடற்படையினர் நெருங்கி வருவதனை அவதானித்த படகு ஓட்டி கரைநோக்கித் தப்பி ஓடியுள்ளார். இதனால் கரையோரம் நின்ற கடற்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதன்போது கரையை அடைந்த கடற்படையினர் படகு ஓட்டியையும் இந்தியாவிற்குத் தப்பிச் செல்ல முயன்றவரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது இலங்கை, இந்திய நாணயங்கள்,படகு,இயந்திரம்என்பனவும் சான்றுப் பொருள்களாகக் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறுகைப்பற்றப்பட்டவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

## எங்கே எங்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்று அபாயம் காரணமாக சமூக இடைவெளி, முகக்கவசங்களை அணிந்தவாறே போராட்டத்தில் உறவினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கதறியழுத உறவுகள், ஐ.நாவே! சர்வதேச சமூகமே!! காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேச விசாரணையைமேற்கொண்டுஉண்மைகளை வெளிப்படுத்துங்கள்!!! உண்மைகளைக் கண்டறிந்து சொல்லாவிட்டால் நாங்களே தற்கொலை செய்வோம்; இல்லையென்றால்எங்கள்மீது குண்டுகளைப் போட்டுக் கொலை செய்துவிடுங்கள்!!!! - என்று கோஷமிட்டனர்.

அத்துடன்,எங்கேஎங்கள்சொந்தங்கள்? ராஜபக்ஷ அரசே பதில் சொல்?, மறைக்கப்பட்ட மனிதர்கள் எங்கே?, வேண்டும் வேண்டும்எமக்கானஉரிமைவேண்டும், தண்டிக்க வேண்டும் தண்டிக்க வேண்டும் மனித உரிமை மீறலைத் தண்டிக்க வேண்டும், ஏற்று ஏற்று சர்வதேசமே குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்று, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், எமது உறவுகளுக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம், மறுக்காதே மறுக்காதே எங்கள் உரிமைகளை மறுக்காதே, இராணுவத்தின் கெடுபிடிகளை உடன் நிறுத்து, எங்கே எங்கே இராணுவத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் எங்கே? போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தக்கவனயீர்ப்புப்போராட்டங்களின் நிறைவில் அந்தந்த மாவட்டங்களில் உரிய அதிகாரிகளிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கான மகஜரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கையளிக்கப்பட்டன.

அந்த மகஜரில், போர் முடிவுற்று 11 வருடங்கள் கடந்துள்ளபோதும், இன்னும் எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கபெறவில்லை. காலம் தாழ்த்தாது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை சர்வதேச விசாரணை மூலம் பெற்றுக்கொடுங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நாடாளுமன்றின் ஆவேச உரைகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்!

எட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. பயிர் விளைவித்துப் பெறும் சுரைக்காய்தான் பயனுடையது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் இத்தகையதே. வெறும் வாய்ப் பந்தல் – பேச்சுச் சவடால் – பயன் தரப் போவதில்லை. அதைக் காரியமாக்குவதில்தான் விவகாரமே உள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் இப்போது வலிமையாக – முன்னை விடச் செம்மையாக – நாடாளுமன்றத்தில் உறைக்க உரைக்கப்படுகின்றன. தமிழ் எம்.பிக்கள் வாளாவிருக்கவில்லை. கனகச்சிதமாகத் தங்கள் பணியை முன்னெடுக்கின்றனர் என்பது உண்மைதான். தமிழர்தம் பிரச்சினைகளைத் துணிவுடனும், வலுவுடனும், பட்டவர்த்தனமாகவும் சிங்களத்தின் நாடாளுமன்றத்துக்குள் நின்று கொண்டு ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்கள்.

சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன், சிறீதரன், சாள்ஸ் நிமலநாதன் ஒருபுறம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் இன்னொரு புறம். நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றொரு புறமுமாக தமிழர் தம் தேசியக் கிளர்ச்சி – உரிமைக்குரல் – மிகப் பலமாகவும் தெளிவாகவும் நாடாளுமன்றத்தில் ஒலிக்கின்றது என்பது வாஸ்தவம்தான்.

எண்ணிக்கை ரீதியில் நாடாளுமன்றத்தில் தமிழர்தம் பிரதிநிதித்துவம் விதந்துரைக்கும் படியாக இல்லை. தமிழர் தேசியம் பேசும் தரப்புகள் ஒருபுறமும், பௌத்த சிங்களப் பேரினவாதத்துடன் இணைந்து நிற்கும் தமிழர் தரப்புகள் மறுபுறமாகவும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் சிதறுண்டு – பிளவுபட்டு – கிடக்கின்றது.

ஆனாலும் கூட, தமிழர் உரிமைக்குரல் அவர்களின் அபிலாஷைகள், எதிர்பார்ப்புகள், வேணவாக்கள், விருப்புக்கள் முன்னைய நிலைமைகளை விட இப்போது வலிமையாகவும், பலமாகவும், உரத்தும் ஒலிக்கின்றன என்பதும் உண்மைதான்.

ஆனால், அதனால் பயன் யாது என்பதுதான் இப்போது எழும் கேள்வி.

தனித்தனியாகவும், பிரித்து நின்றும், இவ்வாறு குரல் எழுப்பினால் மட்டும் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டி விடுமா? தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக் கூடிய ஒழுங்குமுறைகள் வாய்த்து விடுமா? – என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஓங்கி ஒலிக்கும் தமிழர் தம் வேணவாக் குரலை ஒழுங்குபடுத்தி, ஒற்றுமைப்படுத்தி, ஐக்கியமாக ஓங்கி ஒலிக்கச் செய்வதோடு, அதன் தொடராகக் கட்டமைக்கப்பட்ட எழுச்சி ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும்.

ஐக்கியப்பட்ட இந்த எழுச்சி தமிழர் தேசத்தில் மட்டுமல்லாது, ஈழத் தமிழர்கள் வாழும் புலம்பெயர் தேஷம் எங்கும் ஒன்றுபட்டு வெளிப்பட வேண்டும்.

அப்போதுதான் கட்டுறுதியான பெறுபேறு எதனையும் – பயன் எதனையும் – தமிழ்த் தேசம் எட்ட முடியும். தமிழர் தரப்புகளை ஒன்றிணைக்கும் முயற்சி என்ற பெயரில் சில நகாசு வேலைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா முன்னெடுக்கின்றார். ஆயினும் அந்தச் செயற்பாட்டின் உள்நோக்கம் குறித்து – இலக்குக் குறித்து – நம்பிக்கையீனமே தொடர்ந்தும் அழுத்தமாக நிலவுகின்றது.

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வாய்ப்பை மக்கள் நிராகரிப்பால் இழந்த மாவை சேனாதிராஜாவும் சிலரும், தங்கள் அரசியல் இருப்புக்கும் இலக்குகளுக்குமாக நடத்தும் சுய நல அரசியல் லாபம் கருதிய நடவடிக்கையாகவே இந்தப் பல கட்சி இணைப்பு முயற்சி பார்க்கப்படுகின்றது.

பலமாக ஒலிக்கும் – மக்களின் அதிக கவனிப்புக்கு உள்ளாகியுள்ள – தமிழ்த் தேசிய நாடாளுமன்றத் தரப்புகளை 'வெட்டி ஓடுவதான' வடிவத்தில் மாவை சேனாதிராசா குழுவினர் இந்தப் பல கட்சி இணைப்பு முயற்சிகளை நகர்த்துவது வெள்ளிடைமலை.

நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்புகள் எவ்வளவு ஆவேசமாக – அர்த்தமுள்ளதாக – அதிரடியாக – உரைகளை நிகழ்த்தினாலும் –

நாடாளுமன்றத்திலும், வெளியிலும், புலம் பெயர் தேசங்களுடன் தமிழர் தரப்புகள் ஒன்றுபட்டுக்குரல் எழுப்பாதவரை – ஒன்றுபட்டு செயற்படுவதற்காகக் கிளர்ந்தெழாத வரை – இத்தகைய நாடாளுமன்றச் சத்தங்களினாலும் பயனில்லை; அதேசமயம் நாடாளுமன்றத் தரப்புகளைப் புறமொதுக்கி, பல கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு என்று யாழ்ப்பாணத்தில் கூட்டங்களைக் கூடிக் கலைவதிலும் அர்த்தமேயில்லை.

தமிழ்த் தேசிய சக்திகள் நாடாளுமன்றத்திலும், வெளியிலும், புலம் பெயர் தேசங்களிலும், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் ஐக்கியப்பட்டு ஒரே சக்தியாக கிளர்ச்சி கொள்ள வேண்டும். மக்கள் ஆதரவுப் போராட்டங்களாக அவை பீறிட்டெழ வேண்டும். அதன் மூலம் தமிழரின் நீதி, நியாயமான அபிலாஷைகள், எதிர்பார்ப்புகள் பற்றிய குரல் சர்வதேசத்தின் காதுகளில் ஓங்கி அறைவதுபோல விழ வேண்டும்.

அது வரையில் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் ஆரவாரப் பேச்சுகள் வாசிக்கவும் கேட்கவும் மட்டும் பயனுள்ள ஏட்டுச் சுரைக்காய்களாகவே இருக்கும். அவற்றால் பயன் கிட்டப்போவதில்லை.

# அரசியல் கைதிகளின் விடுதலை இந்த அரசின் கீழ் சாத்தியப்படாது!

## அருட்தந்தை சக்திவேல் அதிருப்தி



அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்பது தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சாத்தியப்படாது. எனவே இதுவிடயத்தில் வெளிநாட்டு சக்திகளுடனும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றோம் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சிலர் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரியுள்ள போலும், அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில, அரசியல் கைதிகள் என்று எவரும் நாட்டின் சிறைச்சாலைகளில் இல்லை என்று கூறியுள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்று ஆளுந்தரப்பின் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். எனவே இந்த நாட்டில் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு அவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதே, அரசியல் கைதிகள் எவருமில்லை என்று உதயகம்மன்பில கூறியிருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதேபோன்று அரசியல் கைதிகள் எவருமில்லை என்று முன்னர் ஒருமுறை கூறியிருந்தார்.

அதேவேளை தற்போதைய அரசாங்கம் தேர்தல் பிரசாரத்தின்போதே இந்த நாட்டில் அரசியல் பிரச்சினை இல்லை என்றும் பொருளாதார மற்றும் அபிவிருத்திசார் பிரச்சினைகளே இருக்கின்றன என்றுமே கூறி வந்தது. ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் சிந்தனையைப் பிரதிபலிக்கும் விதமாகவே தற்போது உதயகம்மன்பில மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

எனவே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்பது தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சாத்தியப்படாது என்பது தெளிவாகின்றது. ஆகவே இந்த விடயத்தில் வெளிநாட்டு சக்திகளுடனும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றோம்.– என்றார்.

# வெடியரசன் கோட்டையை அபகரிப்பை நிறுத்துங்கள்!

## சிறி எம்.பி. சபையில் வலியுறுத்தல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.10

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள வெடியரசன் கோட்டையை தனது திணைக்கள உடமையாக்கி தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள காணி அபகரிப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் இன்றைய தினம் உரையாற்றும்போதே மேற்படி கோரிக்கையை அவர் விடுத்தார்.


நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையென்பது தமிழ், பௌத்த அரசன் வாழ்ந்த இடம். இந்தக் கோட்டை அமைந்ததன் காரணமாகவே அந்த இடம் கோட்டைக்காடு என அழைக்கப்படுகின்றது. இந்தக் கோட்டையானது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலாவது கிராம சேவகர் பிரிவான ஜே/01 இல் அமைந்துள்ளது.

அந்த இடத்தை அபகரிக்கும் நோக்கில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச இதழை இரத்துச் செய்து அபகரிப்பை நிறுத்த வேண்டும்.

இந்த நடவடிக்கை மூலம் வெடியரசன் கோட்டைப் பகுதி பௌத்த சின்னமாகக் காண்பித்து ஆக்கிரமிக்கப்படவுள்ளது.

இங்கே இதனோடு தொடர்புடைய அமைச்சரும் இருப்பதனால் இதற்குரிய தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம். – என்றார்.

# திருஞானசம்பந்தபிள்ளை நேற்றுக் காலமானார்



அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவரும் முதுபெரும் தமிழறிஞருமான மு.திருஞானசம்பந்தபிள்ளை நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

சைவ சித்தாந்தப் புலமையும், தமிழ்ப் புலமையும், ஆங்கிலப் புலமையும் கொண்டவரும் இந்திய சைவசித்தாந்த சமாஜத்தின் சைவப்புலவர் தேர்வில் தங்கப்பதக்கம் பெற்ற பெருமையுடையவரும், யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி (MA) கற்கையின் வருகை விரிவுரையாளரும், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நீண்டக்காலமாக தலைவராக நின்று சைவப்பணியாற்றிய சங்கத்தின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் சைவசித்தாந்தப் பண்டிதர் சைவப்புலவர்மணி கலைஞானச்சுடர் சைவப்புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தப்பிள்ளை காலமானார். சிறிது காலம் அவர் சுகவீனமுற்றிருந்தார்.

அவரின் இறுதிக் கிரியைகள் கொக்குவிலில் இன்று மாலை இடம்பெற்றன.

யாழ் சைவபரிபாலன சபையின் தலைவராகவும் அவர் அரும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனலைதீவில் பசுவதைகள் அதிகரிப்பு என குற்றச்சாட்டு!

அனலைதீவில் சட்டத்துக்குப் புறம்பாக பசு மாடு ஒன்றை இறைச்சிக்கு கொலை செய்த நிலையில் கும்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக பசுவதை அதிகரித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது. பசு மாட்டை இறைச்சிக்காக கொலை செய்த நிலையில் அந்த வழியால் சென்றவர்கள் கண்ணுற்றமையால் கும்பல் அங்கிருந்து தப்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளை சில கும்பல்கள் இறைச்சிக்காக அவற்றை கொலை செய்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இந்தக் கும்பல்களுக்கு எதிராக தீவக மக்கள் மற்றும் பொது அமைப்புகள் தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் நிலையில், கும்பல்களின் அட்டகாசம் அதிகரித்தே செல்வதாக மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

# ரிக் வேதத்தில் ஜனநாயகம் பற்றி பேசப்படுகிறது சோழர் காலத்தில் பஞ்சாயத்து முறை இருந்தது!

## புதிய நாடாளுமன்ற அடிக்கல் விழாவில் மோடி பெருமிதம்



பழங்காலத்தில் ஜனநாயகம், மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக இருந்ததாக தெரிவித்த பிரதமர் மோடி, 10 ஆம் நூற்றாண்டில் பஞ்சாயத்து அமைப்புகளை சோழ மன்னர்கள் ஏற்படுத்தினர் எனத் தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிய பின்னர் பிரதமர் மோடி பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

புது பார்லிமென்டிற்கு அடிக்கல் நாட்டப்பட்ட இன்றைய நாள் வரலாற்று சிறப்பு வாய்ந்தது. புதிய நாடாளுமன்றத்தை மக்கள் அனைவரும் இணைந்து கட்டுவோம். இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை பார்க்கும் 130 கோடி இந்தியர்களுக்கும் பெருமையாக இருக்கும். புதிய மற்றும் பழைய பாரம்பரியத்தை கொண்டதாக புதிய கட்டடம் இருக்கும். காலம் மற்றும் தேவையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் முயற்சி இது வாகும்.

2014 இல் எம்.பி.,யாக முதல்முறை நாடாளுமன்றத்திற்கு வந்த நிகழ்வை எனது வாழ்நாளில் மறக்க மாட்டேன். ஜனநாயகத்தின் கோயிலுக்குள் நுழைவதற்கு முன்னர், எனது தலைவணங்கி, ஜனநாயகத்தின் கோயிலுக்கு சல்யூட் செய்தேன். வரலாற்றில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்களை பழைய நாடாளுமன்றம் பார்த்துள்ளது. அம்பேத்கர் எழுதிய அரசியல் சாசனத்தை பார்த்துள்ளது.100 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. ஏராளமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தற்போது ஓய்வு தேவைப்படுகிறது. புது இந்தியாவுக்கு புதிய நாடாளுமன்றம் தேவைப்படுகிறது.

எம்.பி.,க்களுக்கு ஏராளமான வசதிகள் புதிய நாடாளுமன்றத்தில் செய்யப்பட்டுள்ளன. பொது மக்கள் எம்.பிக்கள் எளிதாக கலந்துரையாட முடியும்.

சுய சார்பு இந்தியாவிற்கு சாட்சியாக புது நாடாளுமன்றக் கட்டடம் இருக்கும்.புது இந்தியாவின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் இருக்கும்.

பழங்கால இந்தியாவில் மக்கள் நாடாளுமன்றத்திற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. 10 ஆம் நூற்றாண்டில், சோழர்கள் ஆட்சியில் பஞ்சாயத்து அமைப்பு இருந்தது.தமிழக கிராமங்களில் இன்னும் 10 ஆம் நூற்றாண்டை சேர்ந்த மஹா சபாக்கள் உள்ளன. 10 ஆம்நூற்றாண்டு கல்வெட்டுகள், வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்தது குறித்து பேசுகின்றன. பழங்கால இந்தியாவில், வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஜனநாயகம் இருந்து. ரிக் வேதத்தில் ஜனநாயகம் குறித்த குறிப்புகள் இருந்தன

ஜனநாயகத்தின் சக்தி, இந்தியா வளர்ச்சிக்கு உதவும். மற்ற ஜனநாயகங்களில் வாக்கு எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் வாக்கு எண்ணிக்கையில் பங்கேற்று அதிகரித்து வருகின்றனர். வெவ்வேறான கருத்துகள், ஜனநாயகத்தை துடிப்பானதாக மாற்றுகின்றன. ஜனநாயகத்தில் பேச்சுவார்த்தை என்பது முக்கியம் என குருநானக் கூறியுள்ளார். நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், மக்கள் சேவையில் வேறுபாடு இருக்கக்கூடாது.

மக்களுக்கும் அரசியல்சாசனத்திற்கும் பதிலளிக்க கடமைப்பட்டுள்ளோம்.நாட்டின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்று சேர வேண்டும். புதிய நாடாளுமன்றத்தின் ஆன்மாவாக புதிய எம்.பிக்கள் இருப்பார்கள்.- இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.



## கேரளாவில் வீட்டுக்குள் புகுந்த முதலை வனத்துறையால் மீட்பு

கேரளாவில் வீட்டுக்குள் புகுந்த முதலை வனத்துறையினரால் மீட்கப்பட்டது.

திருச்சூர் மாவட்டத்தில் உள்ள அதிரப்பள்ளி என்ற இடத்தில் வனம் மற்றும் ஆற்றுப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள வீட்டுக்குள் சுமார் 7 அடி நீளமுள்ள முதலை நுழைந்தது.

இதனால் அச்சமடைந்த வீட்டின் உரிமையாளர் இதுகுறித்து வனத்துறைக்கு தகவல் அளித்தார். அங்கு வந்த வனத்துறையினர் முதலையைப் பிடித்து மீண்டும் ஆற்றுக்குள் விடுவித்தனர்.

## சிந்து சமவெளியில் மாட்டிறைச்சி கலாசாரம்

சன்னை, டிசெ.10

4,600 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சிந்து சமவெளி நாகரிக மக்களின் உணவு பற்றிய புதிய தகவல் வெளியாகியுள்ளது. விருப்ப உணவாக மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சியை அவர்கள் அதிகம் உண்டனர் என வரலாற்று ஆய்வு ஒன்று தற்போது உறுதிப்படுத்தியுள்ளது.

சிந்து சமவெளி நாகரிக காலகட்டத்தை சேர்ந்த மண்பாண்டங்களில் கால்நடைகள் மற்றும் மாட்டின் கொழுப்பு படிமம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக 'ஜேர்னல் ஒவ் ஆர்கியாலஜி சயின்ஸ்' இதழில் வெளியான ஆய்வு கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அந்த மண்பாண்டங்களில் படிந்திருந்த உயிரி எச்சங்களை சோதனைக்கு உட்படுத்திய போது இதில் இருப்பது பன்றி மற்றும் அசைபோடும் விலங்கினங்களான மாடுகள் மற்றும் ஆடுகளின் இறைச்சி என்பது கண்டறியப்பட்டது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவரான அக்சயத்தா சூர்யநாராயணன் என்பவரின் வடமேற்கு இந்தியாவின் சிந்து நாகரிகத்தில் இருந்த மண்பாண்டங்களில் 'கொழுப்பின் எச்சங்கள்' என்ற ஆய்வில் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஹரியானா மற்றும் உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள 4,600 ஆண்டுகளுக்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகத்தை சேர்ந்த 7 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஏராளமான விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளன. அதில் 50 முதல் 60 விழுக்காடு எலும்புகள் மாட்டின் எலும்புகள் என்பதும் ஆய்வில் உறுதியாகியிருக்கிறது. எனவே சிந்து சமவெளி நாகரிக மக்களிடையே மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் கலாச்சாரமாக இருந்துள்ளதை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியிருப்பதாக ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்





புதுடெல்லி,டிசெ.10

டெல்லி இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டடத்திற்குப் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

தற்போதைய நாடாளுமன்ற கட்டடம் கட்டப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைய உள்ளது. அதில் போதிய இடவசதியும் இல்லை. எனவே, புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்ட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. தற்போதைய கட்டடத்துக்கு அருகிலேயே புதிய கட்டடம் எழுப்பப்படுகிறது. இதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த இந்திய உச்சநீதிமன்றம் கட்டுமானப் பணிக்கு தடை விதித்தது. இருப்பினும், பூமி பூஜை நடத்தலாம் என்று அனுமதி அளித்தது.

அதன்படி, டெல்லியில் புதிதாக அமைய உள்ள புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டினார் இந்நிகழ்ச்சியில் மத்திய மந்திரிகள், பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் உள்ளிட்ட 200 பேர் பங்கேற்றுள்ளனர்.

971 கோடி இந்திய ரூபா செலவில் புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்டப்படுகிறது. 2022 ஆம் ஆண்டுக்குள் கட்டுமான பணி நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே ஆண்டில் 75 ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்படுகிறது. அதற்குள் புதிய நாடாளுமன்றம் தயாராகி விடும் என்று தெரிகிறது.

அதைத்தொடர்ந்து தற்போதைய நாடாளுமன்ற கட்டடம் தொல்லியல் சொத்தாகப் பராமரிக்கப்படும். நாடாளுமன்றம் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்த பயன்படுத்தப்படும்.

டாடா நிறுவனம், புதிய நாடாளுமன்ற கட்டுமான பணிகளை மேற்கொள்கிறது. 64 ஆயிரத்து 500 சதுர மீற்றர் பரப்பளவில் இது கட்டப்படுகிறது. நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் பிரமாண்ட அரசியல் சட்ட அரங்கம் மற்றும் எம்.பி.க்கள் ஓய்வு எடுக்கும் பகுதி, நூலகம், நிலைக்குழுக்களின் அறைகள், சாப்பிடும் பகுதி, வாகன நிறுத்துமிடம் ஆகியவை இடம்பெற்று இருக்கும்.

மக்களவையில் 888 இருக்கை வசதிகளும், மாநிலங்களவையில் 384 இருக்கை வசதிகளும் இருக்கும். நாடாளுமன்ற கூட்டு கூட்டத்தின்போது, மக்களவையில் 1,224 பேரை அமர வைப்பதற்கான வசதிகள் இடம்பெற்று இருக்கும்.

## 234 தொகுதிகளிலும் போட்டியிட விஜயகாந்தின் தே.மு.தி.க. தயாராம்

சென்னை,டிசெ.10

தமிழகத்தில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் போட்டியிட தயார் என தே.மு.தி.க. பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் பேட்டியில் கூறியுள்ளார்.

தமிழக சட்டசபைக்கான தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெற உள்ளது. இதற்கான ஆயத்த பணிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தனித்து போட்டியிடுவது, கூட்டணி அமைப்பது, பிரசார பணிகளுக்கு தயா



ராவது உள்ளிட்ட உயர்மட்ட வியூகங்களை வகுப்பதில் கட்சிகள் முனைப்புடன் உள்ளன.

இந்த நிலையில், தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இடம் பெற்றுள்ள தே.மு.தி.க.வின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் இன்று கூறும் பொழுது, தமிழக சட்டசபைக்கான 234 தொகுதிகளிலும் போட்டியிட நாங்கள் தயாராக உள்ளோம்.

ஜனவரி மாதம் விஜயகாந்த் தலைமையில் செயற்குழு கூட்டம் கூட்டப்படும். அதில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் என கூறியுள்ளார்.

# அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளராக லாய்ட் ஆஸ்டின் நியமிக்கப்படவுள்ளார்!

## உறுதி செய்தார் ஜோ பைடன்



அமெரிக்கப் பாதுகாப்புத் துறை செயலாளராக முதல் முறையாக கறுப்பினத்தைச் சேர்ந்த லாய்ட் ஆஸ்டின் நியமிக்கப்படவுள்ளமையை அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடன் உறுதிசெய்துள்ளார்.

முன்னதாகவே இந்த செய்தியை அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்திருந்த போதும் ஜோ பைடன், தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

பென்டகனை வழிநடத்திய முதல் ஆபிரிக்க – அமெரிக்கரான 67 வயதான ஜெனரல் ஆஸ்டினின் நியமனத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கினால், கறுப்பினத்தைச் சேர்ந்த முதல் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் என்ற பெருமையை லாய்ட் ஆஸ்டின் பெறுவார்.

ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது அமெரிக்க மத்தியக் கூட்டுப் படை தளபதியாக லாய்ட் ஆஸ்டின் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்துள்ளார்.

அதற்கு முன்னர் இராணுவத் துணைத் தளபதியாக கடந்த 2012 ஆம் ஆண்டில் அவர் பொறுப்பு வகித்தார். தற்போது ஓய்வுபெற்று ஏழு வருடங்களுக்கும் குறைவான காலத்துக்கு பிறகு புதிய பொறுப்பை ஏற்கவுள்ளார்.

# ட்ரம்ப்பின் மேன் முறையீட்டை நிராகரித்தது உச்ச நீதிமன்றம்!



பென்சில்வேனியா தேர்தல் முடிவுகள் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பின் மேன்முறையீட்டை அமெரிக்க உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

எனினும், இந்த தீர்ப்புக்கான காரணத்தை உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், ட்ரம்ப் இதுவரை தமது தோல்வியை ஏற்க மறுப்பு தெரிவித்து வருகின்றார்.

முக்கிய தேர்தல் கல்லூரிகளில் பதிவான முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ட்ரம்ப், மனு தாக்கல் செய்துள்ளார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் பென்சில்வேனியாவை ட்ரம்ப் கைப்பற்றியிருந்த போதிலும் இம்முறை நடைபெற்ற தேர்தலில் ஜோ பைடன் அங்கு வெற்றி பெற்றுள்ளார்.

# ஸ்பேஸ்எக்ஸின் ஸ்டார்ஷிப் புரோட்டோடைப் பூமிக்கு திரும்பியபோது வெடித்துச் சிதறியது




ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் விண்கலத்தின் புரோட்டோடைப் பூமிக்கு திரும்பி வந்த போது வெடித்துச் சிதறியுள்ளது.

டெக்சாசுக்கு அருகே உள்ள கடற்கரை பகுதி ஒன்றில் இருந்து நேற்று தீப்பிழம்புகளை கக்கியவாறு வானில் பாய்ந்த இந்த விண்கலம் 8 கிலோ மீற்றர் உயரம் வரை சென்றது. ஆனால் திரும்பிவரும் போது, எரிகலன் தொழில்நுட்ப கோளாறால் பூமியில் விழுந்து வெடித்து தீப்பிடித்து எரிந்தத

3 எஞ்சின்கள் பொருத்தப்பட்ட இந்த புரோட்டோடைப்பின் சோதனை ஓட்டத்தின் போது ஒன்றன் பின் ஒன்றாக அனைத்து எஞ்சின்களும் செயலிழந்தன.

16 மாடி அளவுக்கு உயரமுள்ள இந்த புரோட்டோடைப் விண்கலத்தை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்த பின்னர், ஸ்டார்ஷிப் மூலமாக செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவது என்பது ஸ்பேஸ்எக்ஸ் அதிபர் எலான் மஸ்கின் கனவுத் திட்டம். ஆனால் தற்போது இந்த திட்டத்திற்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றிய தலைவருடன் பேசவுள்ளார் பொரிஸ் ஜோன்சன்!



பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரை சந்தித்து பேசவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மாநாடு இன்று (வியாழக்கிழமை) பிரசல்ஸில் நடைபெறுகின்றது.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவருடன் பொரஸ் ஜோன்சன் கலந் துரையாடவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிகளை பின்பற்றுவதற்காக பிரித்தானியாவுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

விதிகள் தொடர்பில் ஏற்கனவே பேச்சுகள் நடத்தப்பட்டிருந்தாலும் அது தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் எதுவும் இதுவரையில் எட்டப்படவில்லை.

இந்த நிலையிலேயே, மீண்டிபிடி உரிமைகள், வர்த்தக போட்டித் தன்மைக்கான விதிகள் தொடர்பில் பொரிஸ் ஜோன்சன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ஆகியோருக்கு இடையில் பேச்சு நடத்தப்படவுள்ளது.

இரு நாட்டுத் தலைவர்களுக்கிடையில் ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றாலும், இறுதி உடன்படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பூமியைத் தாக்கும் சூரியப் புயல்!

சூரியனின் மேற்பரப்பில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக உருவான பிளாஸ்மாவும் காந்த மின்னூட்டம் பெற்ற துகள்களும் பூமியை நோக்கி வந்துள்ளன.

இது ஒரு மிதமான மின்காந்த சூரிய புயலாக இருக்கும் என்பதால், பூமியில் ரேடியோ, ஜிபிஎஸ் சேவைகள் மற்றும் உயர் அழுத்த மின் வடங்கள் இன்று வியாழக்கிழமை முதல் பாதிக்கப்படலாம் என அமெரிக்காவில் உள்ள தேசிய வானிலை சேவை அமைப்பு தெரிவித்துள்ளது. நாளை வெள்ளிக்கிழமை வரை இதன் பாதிப்பு நீடிக்க வாய்ப்புள்ளது,

சூரிய துகள்கள் பூமியின் காற்றுமண்டலத்தில் கலக்கும் போது வடதுருவத்தில் ஏற்படும் ஒளி பென்சில்வேனியா முதல் ஓரிகான் வரை காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரியன் தனது புதிய 11 வருட கால சோலர் சைக்கிள் எனப்படும் சூரியகாந்த வீச்சு காலத்திற்குள் நுழைகிறது.

இதன் காரணமாக இனிமேல் அடிக்கடி அதன் மேற்பரப்பில் வெடிப்புகள் ஆக்ரோமாக கிளம்பும். வரும் 2025 இல் அது மிகவும் உக்கிரமாக இருக்கும் என கூறப்படுகிறது. எனவே, வரும் ஆண்டுகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சூரிய புயல்கள் பூமியை தாக்கும் அபாயம் உள்ளதாகக் கூறப்படுகிறது.




# உலக குதிரைப்பந்தய சம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்ற முதல் வீராங்கனையாகச் சாதனை படைத்தார் டாயில்

ஹொங்கொங்கில் நடைபெற்ற உலக குதிரைப் பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் பெண் என்ற பெருமையை இங்கிலாந்தைச் சேர்ந்த ஹாலி டாயில் பெற்றுள்ளார்.

உலகம் முழுவதும் இருந்து 12 குதிரையேற்ற வீரர்கள் பங்கேற்ற இந்த பந்தயத்தின் 4 ஆவது மற்றும் கடைசி சுற்று போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் சக நாட்டு வீராக ரையன் மூர் – ஐ பின்னுக்குத் தள்ளி வெற்றி பெற்ற 24 வயதான ஹாலி டாயில், ஒட்டுமொத்த சம்பியன் தரவரிசையிலும் 3 ஆவது இடத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.



**கல்யாணமாலை**

**வட சர்வதேச திருமண சேவை**

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1978.08.23 | பிறந்த திகதி - 1996.03.21 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - அச்சுவினி | நட்சத்திரம் - திருவாதிரை |
| சூ/ செவ் - 7இல் | பாவம் - 35 |
| பாவம் - 27 | செவ் - -------- |
| கல்வி - A/L | கல்வி - B.A பட்டதாரி |
| தொழில் - சொந்தகடை | தொழில் - ஆசிரியர் |
| எதிர்பார்ப்பு - சாதாரண பெண் | எதிர்பார்ப்பு - அரசஉத்தியோகம். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்ப படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415

077 8578 528

# கொரோனா விதிமுறைகளை மீறிய இளைஞன் பொலிஸாரினால் சாவு!

## அல்பேனியாவில் மக்கள் போராட்டம்



அல்பேனியாவில்கொரோனா விதிமுறைகளை மீறினார் எனக்கூறி இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கொல்லப்பட்டமையைக் கண்டித்து நூற்றுக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இளைஞர் தனது கையில் ஆயுதம் ஏந்தியிருந்தார் என பொலிஸார் குற்றஞ்சாட்டிய நிலையில், விசாரணையின் போது இளைஞரிடம் எந்த ஆயுதமும் இல்லை என்பதை பொலிஸார் ஒப்புக்கொண்டனர்.

இதனிடையே இளைஞரின் மரணத்துக்கு நீதி கோரி உள்துறை அமைச்சகம் முன்பு கூடிய போராட்டக்காரர்கள், பொலிஸார் மீது கற்களை வீசி எறிந்து கலவரத்தில் ஈடுபட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குண்டுகளைப் போட்டே எம்மைக் கொல்லுங்கள்!

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள்







யாழ்ப்பாணம், டிசெ. 10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

எங்கள் மீதும் குண்டுகளைப் போட்டு கொன்று விடுங்கள் என்று உறவுகள் கதறி அழுதனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இன்று முற்பகல் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் நிலைமையைக் கருதிற்கொண்டு குறைந்தளவான உறவுகளே ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் பங்கேற்றிருந்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பில் சர்வதேசமும் ஐ.நாவும் நீதியை வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தியிருந்தனர்.

## ஹெரோயினுடன் நால்வர் சிக்கினர்!

முல்லேரியா, அத்துருகிரிய மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயினுடன் பெண்ணொருவர் உள்ளிட்ட சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

**முல்லேரியா**

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அங்கொட பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 5 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஹிம்புட்டான பகுதியைச் சேர்ந்த 32,38 ஆகிய வயதுகளுடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**அத்துருகிரிய**

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஹன்தொட்ட, கொஸ்ஹேன வீதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இரண்டு கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் கனேமுல்ல பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேக நபரொருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

**கல்கிஸ்ஸ**

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 6 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினுடன் மொரட்டுவ - லுனாவ பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## வடமாகாணத்தில் இதுவரை 125 எச்.ஐ.வி. தொற்றாளர்!

வட மாகாணத்தில் தற்போது வரை 125 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட தொற்று நோய்ப்பிரிவு பதில் வைத்திய நிபுணர் வைத்தியர் சலினி நாணயகார தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 9 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்கான சிகிச்சைகள் தமது கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச எயிட்ஸ் ஒழிப்பு தினைத்தையொட்டி விசேட விழிர்ப்புணர்வு கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட தொற்று நோய் பிரிவு பதில் வைத்திய நிபுணர் வைத்தியர் சலினி நாணயகார இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

15 வயது தொடக்கம் 24 வயது உட்பட்ட இளைஞர், யுவதிகள் அதிகமாக எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை தரவுகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் 2019 ஆம் ஆண்டு வரை 439 புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.



இவர்களில் 15 வயது தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்ட 54 இளைஞர் யுவதிகள் எச்.ஐ.வி. தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் தற்போது வரை 125 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களின் மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 9 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சிகிச்சைகள் எமது கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்டு வரு கின்றன. இந்த நோயை தடுப்பது மக்கள் அனைவருடைய கடமையாகும். ஒவ்வொருவரும் தமது பொறுப்பை உணர்ந்து சுகாதாரதுறைக்குத் தமது ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இந்த நோயில் இருந்து வெற்றி கொள்ள முடியும்.

இதற்கு இலங்கை முழுவதிலும் 34 பாலியல் சிகிச்சை நிலையங்கள் அமைக் கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன. எச்.ஐ.வி. தொற்றுக்கான தாக்கம் இருக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நிலையங்களுக்குச் சென்று பரிசோதனை செய்துகொள்ள முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பின் போது மன்னார் மாவட்ட தொற்று நோயியல் சிகிச்சை பிரிவு பதில் வைத்திய அதிகாரி வைத்தியர் ரி.ஒஸ்மன் டெனி கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி பரிதாப சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 10

பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைத்தோட்டம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் அருகில் காணப்பட்ட பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்தே சிறுமி உயிரிழந்துள்ளார்.

ஏழு வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ்., நல்லூரில் மீளவும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி சபைக்கு வந்த வேளை தோல்வியடைந்தது. இதேபோன்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத்திட்டம் இம்மாதம் 2ஆம் திகதி சபைக்கு வந்த நிலையில் தோல்வியைக் கண்டது. இவற்றின் அடிப்படையிலேயே இந்த இரு சபைகளின் வரவு - செலவுத் திட்டங்களும் இரண்டாவது தடவையாக சபைக்கு வருகின்றன.

இதனடிப்படையில் நல்லூர்ப் பிரதேச சபையின் வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதியும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு -செலவுத்திட்டம் மறுநாள் 16ஆம் திகதியும் மீண்டும் சபைக்கு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் இதுவரை 30 சபைகளின் வரவு - செலவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. செட்டிகுளம் பிரதேச சபையின் வரவு - செலவுத்திட்டம் இரு தடவையும் தோல்வியடைந்துள்ளது. இதேவேளை, மன்னார் பிரதேச சபையின் வரவு - செலவுத்திட்டம் இதுவரை ஒரு தடவையேனும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டிலிருந்து நாடு திரும்புவோருக்கு தனிமைப்படுத்தல் நாள் குறைக்கப்பட்டது!

கொழும்பு, டிசெ.10

வெளிநாடுகளில் இருந்து திரும்பும் இலங்கையர்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட செயன்முறையை 28 முதல் 14 நாள்களில் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கை இன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படும் என கொவிட் - 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

புதிய முறையின் கீழ், வெளிநாட்டிலிருந்து வரும் ஓர் இலங்கையர் கட்டாயமாக 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அதன் முடிவில் பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பரிசோதனை முடிவுகளில் அவருக்கு கொரோனா தொற்று ஏற்படாதவிடத்து, முன்பு நடைமுறையில் இருந்தவாறு அவர் மேலும் 14 நாள்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டிய அவசியமில்லை என இராணுவத் தளபதி கூறினார்.

இதேநேரம், எதிர்வரும் வாரங்களில் சுற்றுலா பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் திறக்க பல பேச்சுகள் நடைபெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் அனைவரும் விமான நிலையத்திலேயே பி.சீ.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் 14 நாள்கள் தமது வீடுகளிலும் சுய தனிமைப்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2020 இல் வெளியிடப்பெற்றது.